**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 173/2019**

**PROSECUTION WITNESS NO. 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** : | தியாகராஜன் | **Caste** : | |
| **Father's/Husband Name** : | வெங்கட்ராமன் | **Religion** : | **Hindu** |
| **Village** : | மானம்புசாவடி, சிவராய தோட்டம் | **Calling** : | பெட்டிக்கடை |
| **Taluk** : | தஞ்சாவூர் | **Age** : | **63/2023** |

**(Accused 1,2,3 absent. Petition U/s. 317(1) CrPC filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.06.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. எம். உதயராணி, தட்டச்சர்**

**<u>C.C.No. 173/2019 16.06.2023</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.00**

## முதல் விசாரணை:

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ரயிலடியில் உள்ள பெட்டிக்கடையில் வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக தேதி மாதம் நினைவில்லை, ஒரு நாள் மதியம் 1.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது ரயிலடி எதிரே பேருந்து நிறுத்தத்தில் 3-4 நபர்கள் உருட்டுக் கட்டைகளை வைத்துக்கொண்டு நின்றுக் கொண்டிருந்தார்கள். அந்த வழியாக செல்லும் நபர்களை தடுத்து நிறுத்தி கோஷம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது மேற்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வி அவர்கள் சம்பவயிடத்திற்கு வந்தார். உதவி ஆய்வாளர் என்னிடம் சம்பவத்தை பற்றிக் கேட்டு தெரிந்துக் கொண்டார். பின்னர் உதவி ஆய்வாளர் கோஷம் போட்டுக் கொண்டிருந்தவர்களை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார். போலீசார் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளார் என்று கேள்விப்பட்டேன். பல வருடங்கள் ஆனதால் அந்த 3 நபர்களை என்னால் தற்போது அடையாளம் சொல்ல இயலாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**C.C.No. 173/2019    16.06.2023**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இரயிலடியில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்கள். போலீஸ் விசாரணையின் போது இரயிலடியில் சம்பவம் நடைபெற்றதாக சொன்னேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோஷம் போட்ட நபர்கள் என்ன சொல்லி சத்தம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.